செ.வெ.எண்:39 நாள்: 22.07.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் கீழையூர் ஒன்றியத்தில் நடைபெற்றுவரும் வளர்ச்சி பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் கீழையூர் ஒன்றியத்தில் நடைபெற்றுவரும் வளர்ச்சி பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

கருங்கண்ணி ஊராட்சி மகிழி குக்கிராமம் பிரதம மந்திரி வீடுகள் (ஊரகம்) கட்டப்பட வேண்டிய பணிகள் குறித்தும், முதியோர் ஓய்வூதியத் தொகை வழங்கிடக் கோரியது குறித்தும், கிராம நிர்வாக அலுவலரிடம் பரிசீலிக்க அறிவுறுத்தினார். பின்னர் குடிநீர் பற்றாக்குறை குறித்து தெரிவிக்கப்பட்டதற்கு, துறை அலுவலர்களிடம் நடவடிக்கை எடுக்கவும் இன்று நடைபெறும் குடிநீர் பற்றாக்குறை தீர்த்தல் ஆய்வுக்கூட்டத்தில் பரிசீலிப்பதாகவும் தெரிவித்தார். தூய்மை பாரத இயக்கம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கழிவறை ஆய்வு செய்தார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் அமைக்கப்பட்ட அய்யனார் கோயில் தெரு சிமெண்ட் சாலை மற்றும் பேவர் ப்ளாக் சாலை, மாணவர்கள் பயன்படுத்தும் கழிவறை ஆகியவற்றை ஆய்வு செய்தார். ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி அருகில் உள்ள குளம் மற்றும் பொதுமக்கள் கோரிய படித்துறை மற்றும் தடுப்புச்சுவர் கட்டுவது குறித்தும், அங்கன்வாடி மையம் ஆய்வு செய்தார். மின் இணைப்பு இல்லாதது குறித்தும், குடிநீர் இணைப்பு இல்லாதது குறித்தும் நடவடிக்கை எடுக்க அதிகாரிகளிடம் அறிவுறுத்தப்பட்டது. கருங்கண்ணி ஊராட்சி, வாழக்கரை சாலையில் கட்டப்பட்டு வரும் பசுமை வீடு மற்றும் கீழையூர் ஊராட்சி கீழத்தெருவில் 10-க்கும் மேற்பட்ட பிரதம மந்திரி வீடுகள் (ஊரகம்) கட்டப்பட வேண்டிய பணிகள் குறித்தும், பிரதம மந்திரி கிராமச் சாலை அபிவிருத்தி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், கீழையூர் முதல் காரப்பிடாகை (வடக்கு) வரையிலான சாலைரூ.209.01 இலட்சம் மதிப்பீட்டில் தரம் உயர்த்துதல் பணி ஆய்வு செய்தார். விழுந்தமாவடி ஊராட்சி, தென்பாதி குக்கிராமத்தில் கட்டப்பட வேண்டிய பிரதம மந்திரி (ஊரகம்) வீடுகள் பணி குறித்து ஆய்வு செய்யப்பட்டு உடன் துவங்க மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் மணல்மேடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் மாநில நிதிக்குழு (மாவட்ட ஊராட்சி) நிதியில் கட்டப்பட்ட சுற்றுச் சுவரை ஆய்வு செய்தார். மணல்மேடு வீரமுத்து ஆசிரியர் வீட்டடி சாலையை, பதினைந்தாவது நிதிக்குழு (மாவட்ட ஊராட்சி) நிதியில் தார்ச்சாலையாக

அமைத்தல் பணி மற்றும் மீனவர் கிராமம் அருகில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் அமைக்கப்பட உள்ள மீன் உலர் தளம் ஆகியவற்றை ஆய்வு செய்தார். கடற்கரைப்பகுதி மீன் இறங்கு தளம் அருகில் மின் விளக்கு அமைக்க கோரியதன் அடிப்படையில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார். மற்றும் மீன்பிடி வலை பின்னுவதற்கான கூடம் அமைக்கும் பணியை விரைந்து துவக்கிட அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது ஊரக வளர்ச்சி துறை செயற்பொறியாளர் செல்வராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**